# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இந்திய-இலங்கை வலுச்சக்தி பங்குடைமையில் ஒரு மைல்கல்</u>**

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவில் கலப்பு முறை புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி திட்டங்களை அமுல்படுத்துவதற்கான ஒப்பந்தமானது, இலங்கையின் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ இந்திக்க அநுருத்த மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா ஆகியோர் முன்னிலையில் இலங்கை அரசாங்கத்தின் நிலைபெறுதகு வலு அதிகார சபை மற்றும் யு சோலர் கிளீன் எனர்ஜி சொலுசன்ஸ் பிரைவேட் லிமிட்டட் ஆகியவற்றினால் 2024 மார்ச் 01ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இத்தீவுகளில் உள்ள மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் இலக்குடன் ஸ்தாபிக்கப்படும் இந்த திட்டங்கள் இந்திய அரசாங்கத்தின் நன்கொடை ஊடாக முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. குறித்த கலப்பு முறைத் திட்டம் சூரிய சக்தி மற்றும் காற்று உட்பட பல்வேறு வகையான ஆற்றல்களை ஒருங்கிணைத்து, திறன்களை மேம்படுத்துகிறது.

02. தேசிய மின்சக்தி கட்டமைப்பில் இணைக்கப்படாத இம்மூன்று திவுகளிலுமுள்ள மக்களுக்காக இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இந்த உதவித் திட்டங்கள், மனிதர்களை மையமாகக் கொண்ட அபிவிருத்தி பங்குடைமை மற்றும் இருதரப்பு எரிசக்தி பங்குடைமை ஆகியவற்றை இலக்காகக்கொண்டு இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்களின் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டுகின்றன. 2023 ஜூலையில் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது வெளியிடப்பட்ட இந்திய இலங்கை பொருளாதார பங்குடைமை தொலைநோக்கு ஆவணத்தில் எரிசக்தி துறை முக்கியத்துவமிக்க பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், எரிசக்தி துறையில் மின்சக்தி வலையமைப்பு தொடர்புகள், பல்பொருள் இருவழி குழாய் அமைப்பு போன்ற பல்வேறு முக்கிய திட்டங்கள் தொடர்பாக இந்தியா இலங்கை இடையில் தற்போது பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

03. இந்திய அரசாங்கம் இலங்கையுடன் கொண்டிருக்கும் ஒட்டுமொத்த அபிவிருத்தி பங்குடைமையானது 5 பில்லியன் அமெரிக்க டொலராக காணப்படுவதுடன் 600 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான திட்டங்கள் நன்கொடையாக வழஙகப்பட்டவையாகும். அத்துடன் 1990 சுவசெரிய அம்புலன்ஸ் சேவை போன்ற முன்னோடி நன்கொடைத் திட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையில் இந்திய வீடமைப்பு திட்டத்தின்

மூன்றாம் நான்காம் கட்டப் பணிகள் மற்றும் இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள அட்டை திட்டம் ஆகியவை அமுல்படுத்தப்படும் பல்வேறு நிலைகளில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

*********************

**கொழும்பு**
**01 மார்ச் 2024**